

## உணவுப் பிரச்சினைக்கு தீர்வு தேடும் மக்கள் நடவடிக்கை

# தீர்மானங்கள்


இதற்கு முன்னர் என்றுமில்லாத அளவுக்கு உணவுப் பொருள்களின் விலை இன்று உயர்ந்து சென்றுள்ளது. அரிசி, கோதுமை மா, பான், பாலுணவு, தேங்காய், பருப்பு போன்ற அன்றாட அத்தியவசிய உணவுப் பொருள்களின் விலை கடந்த வருடம் இரண்டு அல்லது மூன்று மடங்காக உயர்ந்து சென்றுள்ளது.

தனது அன்றாட வருமானத்தில் 80மூ அல்லது 90மூ த்தை உணவுப் பொருள்களுக்காக மட்டும் செலவிட வேண்டி ஏற்பட்டுள்ள வறிய மக்களுக்கு இந்த விலை உயர்வு எந்த வகையிலும் தாங்க முடியாத அளவாகும்.

உலக சனத்தொகையில் 40மூ மானவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட வறிய மக்களின் வருமான அளவான ஒரு நாளைக்கு 2 டொலருக்கும் குறைவான வருமானத்தைப் பெறுபவர்களாவர். ஐந்து வயதுக்குக் குறைந்த சிறுவர்களுல் 30மூ மானவர்கள் போஷாக்கின்மையால் வாடுகின்றனர். மூலை வளர்ச்சி பெறாத, வளர்ச்சி குன்றிய சிறுவர்களின் அளவு மிக அதிகமாகும். நாட்டு மக்களுல் பாதி அளவினர் ஒரு நாளைக்குப் பெற வேண்டிய 2030 கிலோ களரிக்குப் பதிலாகப் பெறுவது 1600 கிலோ களரி அளவு மட்டுமேயாகும். இந்த நிலை நாட்டின் எதிர்காலத்தைக் கொலை செய்வதாகும். இவ்வாறான நிலையில் மேற்கூறியவாறு உணவுப் பொருள்களின் விலை உயர்வு பஞ்சத்திற்கு சமமான ஒரு நிலைமையை தோற்றுவிப்பதாகும். இவ்வாறான உணவுப் பொருள்களின் விலை உயர்வோடு ஏனைய அத்தியாவசிய செலவுகள் உயர்ந்து செல்லல் சம்பந்தமாகவும் கவனம் கொள்ள வேண்டியுள்ளது. இது அரசியல் கட்சிகளிடையே விவாதங்களுக்கு மட்டும் வரையரையாக வேண்டிய ஒரு விடயமல்ல.

## உலகில் உணவுப் பொருள்களின் விலை உயர்வு மேலும் அதிகரிக்கும்

இவ்வாறு உலகில் வாழும் வறிய மக்கள் மிகப் பயங்கரமான முறையில் உணவுப் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகையில் இலாபம், பேராசை என்பவற்றிக்காகச் செயற்படும் சர்வதேச வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் சில நடவடிக்கைகள் காரணமாக இந்த நிலை மேலும் பயங்கரமானதாக மாறலாம் என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.




மனித உணவு உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட அதிகளவான பூமி சக்தி வளப் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. கோதுமை, சோளம், கரும்பு போன்ற மனித உணவு இன்று சக்தி வளமாகப் பயன்படுத்தல் வேகமாக உயர்ந்து சென்றுள்ளது.

இயற்கையின் நடைமுறை வாழ்வுக்கு அச்சுருத்தலாகும் விதத்தில் மேற்கொள்ளப்படும் தொழிற் துறைகள் மற்றும் விவசாயம் காரணமாகவும், வாயு கோலத்துடன் காபன்டயொக்சைட் போன்ற வாயு ஒன்று சேரல் அதிகமாவதன் காரணத்தாலும் ஏற்படும் வாயு கோலம் வெப்பமடைதல் மற்றும் கால நிலை மாற்றங்கள் உணவு உற்பத்தி சம்பந்தமான விடயத்தில் பாரிய தீங்குகளை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளப் பெருக்கு, வரட்சி, சூராவளி மற்றும் விளைச்சல் குறைந்து செல்லல் என்பவை காரணமாக பட்டினி அதிகரித்துள்ளது.

கிராமப்புற சனப் பெருக்கத்தையும் விட நகர்ப்புற சனப் பெருக்கம் உயர்ந்து சென்றுள்ளது. 2008 ம் ஆண்டின்போது கிராமப்புற மற்றும் நகர்புற சனத்தொகை சமமான நிலைக்கு முன்னேறியது. உணவு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் கிராமப்புற சனப் பெருக்கத்தையும் விட நுகரும் நகர்ப்புற சனப்பெருக்கம் அதிகரித்தல் உணவுப் பொருள் விலை உயர்வுக்கு ஒரு காரணமாகும்.

மசகெண்ணெய் விலை உயர்வின் காரணமாக இரசாயன பசளை வகைகளின் மற்றும் இரசாயன இடு பொருள்களின் விலை மேலும் உயர்ந்து செல்லக் கூடும். இந்த எல்லா விடயங்களும் ஒரேமிக்க நடைபெறுவதன் காரணமாக எதிர்காலத்திலும் உலகில் உணவுப் பொருள்களின் விலை குறையாது எனக் கூறப்படுகிறது. உணவுப் பொருள்களின் விலை மேலும் உயரும் என்றே கூறப்படுகிறது.

இன்று உணவுப் பற்றாக் குறையின் காரணமாக போஷாக்கின்மையும், கேடுதலான உணவின் காரணமாக நோய் நொடிகளும் பயங்கரமான சுகாதாரப் பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. நீரிழிவு, கொலஸ்ரடோல், சிறு நீரக வியாதி என்பவற்றோடு உடம்பின் எதிர்ப்புச் சக்தி குறைந்து செல்லல் பயங்கரமான முறையில் அதிகரித்துள்ளது.

## இந்த எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க முடிந்த ஒரு வழிமுறையாக

**உணகூப் பிரச்சினையை தீர்ப்பதற்கான போதுமக்கள் நடவகெ்கை.**

**இலங்கை பூ ராவும் வாழும் சிறு அளவிலான விவசாயிகளால் மற்றும் ஏனைய மக்களால் செயற்படுத்தப்படும்.**

**குறைந்த செலவு கொண்ட இயற்கைப் பயிர்ச்செய்கையின் மூலம் மண்ணின் மற்றும் சுற்றாடலின் மீளுற்பத்தித்திறனை முன்னேற்றல். போஷாக்கை முன்னேற்றல், சுகாதாரத்திற்கு ஏற்ற விலை குறைந்த உணவை சுலபமாக்கள், வரட்சி, வெள்ளப்பெருக்கு, மண்ணரிப்பு, மண் சரிவு மற்றும் ஏனைய சுற்றாடல் பிரச்சினைகளை குறைத்தல். நோய் பரவுதல், வறுமை நிலை, தொழிளின்மை, கடன் சுமை இல்லாதொழிக்கப்படல் போன்றவற்றுக்காக இலங்கையிலிருந்து ஏனைய நாடுகளுக்கும் சுற்றாடல் விவசாயத்தின் வெற்றிகரமான அனுபவங்களை மற்றும் நவீன விஞ்ஞான ஏற்புக்களை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும் புதிய வழிமுறை முன் வைக்கப்படுகிறது.**

1. உணவுப் பிரச்சினையை தீர்க்க முடிவது சிறு அளவிலான விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை முறையின் மூலமேயாகும்.

இலுங்கையில் அதிகமானவர்கள் இன்னும் கிராமப் புறங்களில் வாழும் சிறு அளவிலான விவசாயிகளேயாவர். அந்த விவசாயிகளுக்கு தமது சிறிய பூமியை மண் அரிப்பிலிருந்தும் பாதுகாத்து இயற்கைச் செழிப்பை முன்னேற்றிக் கொள்ளவும், கலப்புப் பயிர்ச் செய்கை முறையினுல் சூரிய ஒளியைப் பெற்றுக் கொள்ளவும், பூச்சிகளின் தொல்லைகளைக் குறைத்துக் கொள்ளவும் உணவைச் சுலபப் படுத்திக் கொள்ளவும் குறைந்த செலவில் முடிகின்றது. இவ்வாறு நாடு பூராவுமுள்ள வீட்டுத் தோட்டங்களையும் பயிர் நிலங்களையும் செழிப்பாக்கிக் கொள்வதன் மூலம் இயற்கையின் மீளுற்பத்தித் திரனையும் முன்னேற்றிக் கொள்ள முடியும். இது நாடு பூராவும் தற்பொழுது மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கையில் பாரியதொரு பரிவர்தனையாகவும் அமைந்து விடும்.



விவசாயிகளை இது போன்றதொரு பயிர் செய்கைக்கு ஊக்குவிப்பதற்காக தற்பொழுது இரசாயனப் பசளை மற்றும் ஏனைய இரசாயனப் பொருள்களுக்காக செய்யப்படும் பாரிய அளவு பணத்தை மீதப் படுத்தி அந்தப் பணம் மேற்கூறப்பட்ட பரிவர்த்தனைக்காக பாடுபடும் சிறு அளவிலான விவசாயிகளுக்கு நேரடியாகப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். இதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்காக அதிக பணம் சேமிக்கப்படுவதோடு நன்மையான பெறு பேறுகளும் கிடைக்கக் கூடும். நோய் நொடிகளும் குறைந்து விடும்.

2. தற்பொழுது விவசாயத் திணைக்களத்திலும், விவசாய மக்கள் சேவைத் திணைக்களத்திலும், அமைச்சிலும் அதிக அளவிலான ஊழியர்கள் கடமை புறிகின்றனர். நாட்டின் பயிர்ச் செய்கைத் துறை எவ்வாறு வடிவமைக்கப் பட வேண்டும் என்பது பற்றிய தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கையின்போது பாரிய தாக்கங்களைச் செய்யக் கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்குள்ளது. விவசாய நிபுனர்கள் மற்றும் மேற்கூறப்பட்ட அமைச்சுக்கள் திணைக்களங்களில் உள்ள உயர் அதிகாரிகள் தொடக்கம் கீழ்மட்ட கிராமிய ஆலோசகர்கள், உத்தியோகஸ்தர்கள் வரை நாட்டின் பயிர்ச் செய்கைத் துறை எவ்வாறு தயார் செய்யப்பட வேண்டும் என்பது பற்றிய ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்துவது அவசியமாகின்றது. "பயிர் செய்வோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" நிகழ்ச்சி நாடு பூராவுமுள்ள 40 இலட்சம் வீட்டுத் தோட்டங்களிலும் "கெமி திரிய" 5000 ம் கிராமங்களிலும் செயற்படுத்தப்படுவதோடு "கம நெகும" முதல் கட்டத்தில் 4000 ம் கிராமங்களில் செயற்படுத்தப் படுகின்றன. இந்த எல்லாக் கிராமங்களையும், எல்லாப் பயிர்ச் நிலங்களையும் மேல் கூறப்பட்ட குறைந்த செலவுடன் கூடிய சுற்றாடலுக்கு ஏற்ற, கலப்புப் பயிர்ச் செய்கையுடன் கூடிய சுகாதாரத்திற்கு ஏற்ற உணவை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்த முடியும். இந்த நிகழ்சிகளை முன்னெடுக்கும் அதிகாரிகளுக்கும், அவற்றுக்கு தலைமை வகிக்கும் கிராம மக்களுக்கும் விவசாயத்திற்கான சரியான வழி முறைகள் என்ன என்பது பற்றிய சரியான தெளிவை பெற்றுக் கொடுத்தல் கட்டாயமாகும்.




3. இயற்கை பயிர்ச் செய்கைத் துறையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உணவு உற்பத்திக்கு மிக அவசியமான காணி உரிமையை பெற்றுக் கொடுக்க வேண்டியது அக்காணிகளை விற்பனை செய்ய ஊக்குவிக்கப்படாத முறையிலேயேயாகும்.

தற்பொழுது கிராமிய மக்களுக்குச் சொந்தமான காணிகளில் பயிர்செய்யப்படுவது தேசிய உணவு உற்பத்திப் பொருள்களேயாகும். இப்பயிர்ச்செய்கை விலை குறைந்த பயிர் வகைகளை உற்பத்தி செய்யும் பயிர்ச் செய்கையாக இருப்பதனால் அது விவசாயத்தின் முன்னேற்றத்திற்கு உதவி செய்வதில்லையென்றும், ஆதலால் விலை கூடிய பயிர்ச் செய்கை முறையை நோக்கிச் செல்ல வேண்டுமென்றும் 1996 ம் ஆண்டு உலக வங்கியால் வெளியிடப்பட்ட "பயிர்ச் செய்கை அல்லாத பயிர் வகைகளுக்கான மாற்றுக் கொள்கை யோசனைகள் " எனும் அறிக்கையின் மூலம் சிபார்சு செய்யப்பட்டது. நெல் விவசாயம் அது போன்ற விலை குறைந்த ஒரு பயிராக இருப்பதால் அது அதைரியப்படுத்த வேண்டிய ஒரு பயிர்ச் செய்கையாகுமெனவும் சிபார்சு செய்யப்பட்டது. சிறு அளவிலான விவசாயிகளின் காணிகள் விற்பனை செய்யப்பட வேண்டுமென்றும், அதற்கு வசதியாக எல்லா விவசாயிகளுக்கும் காணிகளை விற்பனை செய்ய முடிந்த வகையில் சிக்கலற்ற காணி உறுதிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் உலக வங்கி சிபார்சு செய்தது. அதன் படி அரசாங்கம் சுவர்ன பூமி, ஜய பூமி, ரத்ன பூமி என்ற பெயர்களில் அக்காணிகளை விற்பனை செய்ய முடிந்த காணி உறுதிகளை பெற்றுக் கொடுக்கும் முயற்சிகளை அரசாங்கங்கள் மேற்கொண்டன. இன்று அத்திட்டம் "பிம் சவிய" எனும் பெயரில் முன்னெடுக்கப்பட உள்ளது.

விவசாயிகளுக்கு அவர்களது பயிர் நிலங்களின் உரிமையைப் பெற்றுக் கொடுத்தல் நல்லதொரு காரியம்தான். இருந்தாலும் அது மேற்கொள்ளப்பட வேண்டியது அந்தச் சிறு அளவிலான விவசாயிகளின் காணிகள் விற்பனை செய்யப்படல் இலகுவாகும் முறையில் அவர்கள் எதிர்காலத்தில் காணி இல்லாத, விவசாயம் செய்யச் சந்தர்ப்பமற்ற, அனாதரவானவர்களாக நகரங்களை நோக்கி சங்க மிக்க வைக்கும் படியாக இருந்தால் அது அழிவு ரீதியான ஒரு நடவடிக்கையாகவே அமைந்து விடும். கிராமப் புற மக்கள் அனாதரவானவர்களாக, தொழிலில்லாத ஏழைகளாக பாரிய அளவில் நகரங்களை நோக்கி இடம் பெயற வைத்தல் அழிவு ரீதியான நடவடிக்கையாக வே அமைந்து விடும்.

இன்று உலகின் அதிகமான நாடுகளில் நகர்ப்புற அனாதரவான மக்களின் அளவு அதிகரித்துச் சென்றுள்ளது. நகர்ப்பபுறங்களில் ஆகர்ஷிக்கத்தக்க தொழிற் வாய்ப்புக்கள் இருக்குமாயின், அதன் காரணமாக நகர்ப்புறங்களை நோக்கிச் செல்ல கிராமிய மக்கள் ஆர்வம் கொள்வதாக இருந்தால் அது வேரொரு



நிலைமையாகும். இருந்தாலும் இலங்கையில் அவ்வாறான ஒரு நிலைமை இல்லை. அது போன்ற நகர்ப்புற தொழிற் வாய்ப்புக்களை எதிர்பார்த்து கிராமிய வாழ்க்கையிலிருந்தும் நகர்ப்புறங்களை நோக்கிச் செல்ல முயற்சி செய்த இளைஞர்கள் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காத காரணத்தால் கிளர்ச்சிகளைச் செய்த சந்தர்ப்பங்களும் இலங்கையில் உள்ளன. 1971 ம் ஆண்டு முதலாவது கிளர்ச்சியின் போது 10,000 இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதோடு 1988 – 90 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 60,000 ம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டனர். வட கிழக்கு இளைஞர்கள் அதுபோன்ற ஒரு யுத்தத்திற்கு செல்லக் காரணம் அவர்களுக்கு கிராமத்திலோ அல்லது நகரத்திலோ ஆகர்ஷிக்கத்தக்க ஜீவணோபாய மார்க்கங்கள் இல்லாமையினாளாகும்.


எதிர் காலத்திலும் கூட அதுபோன்ற தொழிற் துறை அபிவிருத்தி வேகமாக நடைபெறுமென எதிர்பார்க்க முடியர்து. ஆதலால் இந்த சிறு அளவிலான காணிகளில் விவசாயம் செய்யும் கிராமப்புற விவசாயிகளின் விவசாய மார்க்கங்கள் அதிக பயனுள்ள ஆகர்ஷிக்கத்தக்க ஜீவணோபாய மார்க்கமாக மாற்றியமைத்தல், அதன்படி அந்த விவசாயிகளை தமது காணிகளை விலைக்கு விற்பனை செய்து விட்டு நகர்ப்புற அனாதரவான மக்களாக மாறுவதற்கு சந்தர்ப்பமளிக்காமலிருத்தல் நாட்டின் உணவு மற்றும் விவசாயப் பிரச்சினையை தீர்ப்பதற்காக மட்டுமல்லாது சமுதாய அடிப்படையில் ஆரோக்கியமான அபிவிருத்திக்கும் இன்றியமையாத விடயமாகும்.

சிறு காணிகளில் மேற்கொள்ளும் பயிர்ச் செய்கையையும் விட, பாரிய அளவிலான காணிகளில் மேற்கொள்ளும் இயந்திரமயமான விவசாயம் அதிக செயற்திறன் கொண்டதாகும் என்ற கருத்து இன்று பொய்ப்பிக்கப்ட்டடுள்ளது. சிறு அளவிலான விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் விவசாயம் அதிக பயனுள்ளது. செயற்திறன் கொண்டது என்பதும், வறுமையை ஒழித்துக் கட்டும் விடயதில் சிறு அளவிலான விவசாயிகளால் வழங்க முடிந்த பங்களிப்பு அதிகம் என்பதை இன்று உலக வங்கி போன்ற நிறுவனங்களும் கூட ஏற்றுக் கொள்கின்றது. அன்மையில் மேற்கொண்ட சர்வதேச கற்கைகளின் மூலமும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு சிறு காணியைக் கொண்டு மட்டும் ஒரு கிராம வாசியால் வாழ முடியாது என்பது உண்மையே. அதற்குத் தீர்வாக இருப்பது அவர்களை அந்தக் காணிகளில் இருந்தும் தூரமாக்கி அவர்களை அனாதரவானவர்களாக மாற்றுவதல்ல.

கிராமப் புறப் பிரதேங்களில் சிறு அளவிலான காணிகளில் விவசாயம் செய்யும் சில குடும்பங்களை அவர்களது கிராமத்தில் கூட்டுப் பயிர்ச் செய்கை முறையின் மூலம் சுற்றாடல் கலப்புப் பயிர் வகைகளைப் பயிரிடவும், அப்பயிர்ச் செய்கையை, விற்பனையை கூட்டுறவு முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளல் இதற்கு ஒரு தீர்வாக அமையக் கூடும் . சிறு அளவிலான விவசாயிகள் கூட்டுறவு முறையில் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடல் இன்று வியட்நாம், ஜப்பான், சீனா,போன்ற நாடுகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றது.


இவ்வாறானதொரு முறையிலன்றி காணியின் உரிமையை (உறுதியின் மூலம்) ஒப்படைத்தல் அந்த விவசாயிகளுக்கு காணியின் உரிமையை இழக்க வைக்க ஊக்கப்படுத்துவதோடு அதனைனச் செயற்படுத்த சந்தர்ப்பம் வழங்கவும் கூடாது.



4. விதை வளங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்.

ஊணவுப் பயிர் வகைகளுக்கும் இயற்கையின் நடை முறை வாழ்வுக்கும் சூரிய ஒளி, நீர், மண் மற்றும் காற்று போன்றவைகளோடு விதை வகைகளும் முக்கியமாகின்றன. மனித இனமும் அனைத்து உயிரினங்களும் இந்தளவு நீண்ட காலங்கள் உயிர் வாழ்ந்தது இயற்கையால் மேற்கொள்ளப்படும் விதை உற்பதியாலும் மீளுற்பத்தித்திறனைக் கொண்டுமேயாகும். தமது வியாபாரத் தேவைகளுக்காக விதை உற்பத்தி மற்றும் விற்பனையை தமது கைகளில் வைத்துக் கொண்டுள்ள கம்பனிகள் இன்று அதிக விளைச்சளைப் பெற்றுத் தரும் விதை வகைகள் எனும் பெயரில் எமது இயற்கையான விதைவகைகளை அழித்து வருகின்றனர். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் மூலம் உலகம் முழுவதிலும் இருந்த அதிக அளவிலான இயற்கை விதை வகைகள் எமக்கு இல்லாமல் சென்றன. அதற்குப் பதிலாக இரசாயன பசளை வகைகள், கிருமி நாஷினி போன்ற கேடுதலான, அதிக இடுபொருள்களில் தங்கி நிற்கும் ஒரு விவசாய முறை

உலகம் பூராவும் பரவலாக்கப்பட்டது. இலங்கையில் இம்முறை 1965 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு அது மிகவும் பெறுமதி வாய்ந்த தேசிய விதை வகைகளின் அழிவுக்குக் காரணமாகியது. அது இன்று மண்ணின் இயற்கையான செழிப்புத் தன்மையை அழித்தொழிக்கும், வறிய மக்களால் தாங்க முடியாத அதிக செலவுடைய பயிர்ச்செய்கையை உருவாக்கியுள்ளது. சுகாதாரத்திற்கு ஏற்ற உணவுக்குப் பதிலாக போஷாக்குக் குறைந்த நோய்க்கும் காரணமாக அமையும் உணவு வகைகளையும் சுற்றாடலையும் உருவாக்கியுள்ளது.




அன்மையிலிருந்து மேற்கூறிய வனிக ரீதியான விதைக் கம்பனிகளால் வினியோகிக்கும் அதிக அளவான விதை வகைகள், மரக்கரி, பழ விதை வகைகள் ஒரு முறை மட்டும் விளைச்சலைப் பெற்றுத் தரும் விதைகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. தாம் பயிர் செய்யும் விளைச்சலில் இருந்து தரமான விதைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை மீண்டும் மீண்டும் பயிரிடல் விவசாயிகளால் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வந்த முறையாகும். இவ்வாறு மீண்டும் முளைக்காத விதை வகைகளை இன்று நாடு பூராவும் பரவலாக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

நல்ல தரமான விதை வகைகளை உற்பத்தி செய்தல், அவற்றை குறைந்த விலையில் இலகுவாக விவசாயிகளால் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல் அரசின் பொறுப்பாக இருக்க வேண்டும். அதற்குப் பதிலாக விதை இறக்குமதி, விற்பனை மற்றும் விதை உற்பத்தி போன்றவற்றை முன்னர் கூறிய இலாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்ட விதை கம்பனிகளிடம் ஒப்படைத்தல் நாட்டின் பயிர்ச் செய்கைத்துறையை, உணவு சம்பந்தமான உரிமையை அழித்தொழிப்பதே ஆகும் இக்கொள்கைகளிலும் திட்டங்களிலும் உடனடியான மாற்றத்தை ஏற்படுத்தி மீண்டும் எமக்கு அதிக பயன்தரக் கூடிய இயற்கையான விதை வகைகளை பாதுகாத்துக் கொள்ளல், பரவலாக்கள் நாட்டின் கொள்கையாக மாற்றியமைக்க வேண்டும்.

எல்லா விவசாய நிலத்துக்கும், வீட்டுத் தோட்டத்துக்கும் தேவையான இயற்கை விதையை தாமே உற்பதி செய்து கொள்ள எல்லாக் குடும்பங்களையும் ஊக்குவித்தல் தேசிய விதை வகைகளை பாதுகாப்பதற்கான மிகச் சிறந் வழி முறையாகும். இன்று உலகம் பூராவும் விதை வகைகளின் ஆதிபத்தியத்தை தமது கைகளில் வைத்துக் கொள்வதற்காக முயற்சிக்கும் விதை விற்பனைக் கம்பனிகள் சில உள்ளன. கார்கில், மொன்சண்டோ, சின்ஜெண்மா மற்றும் ஷெல் அவற்றுல் சிலவாகும். இந்த நிறுவனங்களின் முயற்சியை மனித இனத்தின் சார்பாக தோற்கடிக்க வேண்டியுள்ளது.

## மரபணு மாந்ற விதைப் பரவலாக்கள்.



மேற்கூறப்பட்ட நிறுவனங்களும் அவற்றுக்கு அனுசரனை வழங்கும் அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் உணவுப் பிரச்சினையை தீர்ப்பதற்காக எனும் பெயரில் இயற்கை விதை, இயற்கை உணவு என்பவற்றுக்குப் பதிலாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதை வகைகளையும் உணவு வகைகளையும் பரவலாக்க பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த முயற்சியின் புதிய இடமாக ஆபிரிக்க கண்டத்தை அகப்படுத்திக் கொள்ளும் நோக்கில் " புதிய ஆபிரிக்க பசுமை புரட்சி" முன்னெடுக்கப்ட்டுள்ளது. இதன் பின்னால் உலகின் மிகப் பெரிய பணக்காரரான பில் கேட்ஸூம் (பில் கேட்ஸ் அமைப்பின் திருமதி பில் கேட்ஸ்) ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னால் செயளாளருமான கொபி அனன் போன்றவர்களும் உள்ளனர்.

இந்த மரபணு மாற்ற விதை வகைகள் மற்றும் உணவு வகைகள் சம்பந்தமாக உலகம் பூராவும் பாரிய சந்தேகங்களும் பயமும் நிலவி வருகின்றது. அக்கம்பனிகளின் ஆதிபத்திய உரிமைகள் பற்றியும், அதிக விலையும், அவற்றால் ஏற்படவுள்ள நீண்ட கால பெறுபேறுகளைப் பற்றிய சந்தேகங்களின் காரணமாகவும் இந்த எதிர்ப்பு மேலெழுந்துள்ளது. இதுபோன்ற ஆபத்தான நிலைமை இலங்கையில் ஏற்படுவதை தடுத்து நிறுத்துவதற்காக நாங்கள் வழிப்புடன் இருத்தல் வேண்டும். இவை எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு எமது தேசிய விதை வளங்களை பாதுகாத்துக் கொள்ளல் மிகவும் முக்கியமாகின்றது.



## 5. ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட வனிகப் பயிர்ச் செய்கையையும் விட நாட்டு மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்திக்காக பூ மியையும் வளங்களையும் ஒதுக்கும் நடவடிக்கைக்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும்.

நாட்டை உணவில் தன்னிறைவு செய்தல், நாட்டு மக்களால் தாங்க முடிந்த விலைக்கு உணவைப் பெற்றுக் கொடுத்தல், சிறு அளவிலான விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு போதுமான விலையைப் பெற்றுக் கொடுத்தல் சுதந்திரம் கிடைத்ததில் இருந்து 1977 ம் ஆண்டு வரை எல்லா அரசாங்கங்களும் கடைபிடித்து வந்த கொள்கையாக இருந்து வந்தது.

1977 ம் ஆண்டின் பின்னர் உலக வங்கியின் வழிகாட்டலின் படி எல்லா அரசாங்கங்களும் அக்கொள்கையிலிருந்தும் தூரமாயின. ஏற்றுமதிக்கான வனிக ரீதியான பயிர்ச் செய்கைத் துறை வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அதற்காக பாரிய அளவிலான வரிச் சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் கடந்த 30 வருடங்களாக கடைபிடிக்கப்பட்ட கொள்கையாக இருந்தது. இருந்தாலும் இன்று வரை அதில் வெற்றிகான முடியவில்லை. கர்கின் மெலன், பேபி கோன், புகையிலை, பூ என்பவற்றுக்காக முதலீட்டாளர்களை வரவழைத்துக் கொள்வதற்காக மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. அந்த கம்பனிகளை வரவழைத்துக் கொள்ள முடிந்தது சர்வதேச விலையையும் விட கூடுதலான விலைக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் சீனியைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தின் கீழேயாகும்.



முதலில் உலக வங்கி தேசிய உணவுப் பயிர்ச் செய்கையையும் விட ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைத் துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமெனச் சிபார்சு செய்தாலும் இன்று நிலவும் உலக உணவுப் பிரச்சினை காரணமாக தேசிய உணவு உற்பத்திப் பயிர்ச் செய்கைக்கு முதலிடம் வழங்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்கின்றது. எனினும் கடந்த 30 வருட காலங்களாக தேசிய உணவு உற்பத்தித் துறைமீது அரசு கவனம் கொள்ளாதிருத்தல் காரணமாகவும், அதற்கான வழங்கப்பட்ட அரச

அனுசரனை உற்பட கொள்கைகளில் மாற்றங்களைச் செய்தல் காரணமாகவும் ஏற்பட்டது பாரிய நஷ்டங்களேயாகும். இந்த நிலையிலிருந்தும் மீள்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதோடு, இப்பிரச்சினைகளுக்கு வழி காட்டிய உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்கள் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்ற குற்றச்சாட்டை முன்வைக்க இந்நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். உலக வங்கியின் ஆலோசனைகளிலிருந்தும் தாக்கங்களிலிருந்தும் விடுபட வேண்டுமென்பது இதன் மூலம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாகும்.

## 6. *விவசாயம் மற்றும் உணவுப் பொருள் வியாபாரம் சம்பந்தமான தனியார் துறையினரிடமுள்ள ஆதிபத்தியம் அகற்றப்படல் வேண்டும்.*

மக்களால் சுமக்க முடிந்த, வெற்றிகரமாகச் செயற் படுத்த முடிந்த, ஆரோக்கியமான சுற்றாடல் பயிர்ச் செய்கைத் துறையைக் கட்டியெழுப்புவதற்காகவுள்ள முக்கிய தடை தனியார் நிறுவனங்களிடமும, வியாபாரிகளிடமுள்ள ஆதிபத்தியமாகும். நாட்டின் பயிர்ச் செய்கைத் துறை, விஞ்ஞானிகளுல், ஆலோசகர்களுல் சிலர் இந்த நிறுவனங்களின் தேவைக்காகச் செயற்படுபவர்களாகவுமுள்ளனர். அதிக விலைகொண்ட இரசாயனப் பசளைப் பாவனையிலிருந்து விடுபட வேண்டுமென அரச அதிகாரிகள் சிலர் கூறினாலும் விவசாயத் திணைக்களம் இன்னும் அதற்கான ஆலோசனைகளை, ஊக்குவிப்பை வழங்கவில்லை. விவசாய இரசாயனப் பொருள் விளம்பரங்களுக்கு அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளதோடு விவசாய மத்திய நிலையங்களும் அரச நிறுவனங்களும் அவற்றை விற்பனை செய்யும், வினியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அனைத்து ஊடகங்களும் அதற்காக சுதந்திரமாகப் பயன்படுத்தப் படுகின்றது. அவற்றை விற்பனை செய்யும் அளவுக்கு அந்த நிறுவனங்கள் அரச திணைக்களங்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் கமிஷன்களை வழங்குகின்றன.


உணவுப் பொருள் விற்பனைத் துறையிலும் இதுபோன்ற தனியார் நிறுவனங்களுக்குள்ள ஆதிபத்தியம் பாரியதாகும். நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாலை நான்கு தனியார் நிறுவனங்களால் சேகரிக்கப்படுவதோடு பால் உற்பத்தியாளர்களுக்கு பாலுக்கான நியாயமான ஒரு விலையை பெற்றுக்கொள்ளத் தடையாக இருப்பது பால் கொள்வனவின் போது அந்த நிறுவனங்களிடமுள்ள ஆதிபத்தியமேயாகும். நெல் கொள்வனவு உற்பட அரிசி விற்பனை சம்பந்தமாகக் கூறுவதாக இருந்தால் நாட்டின் பிரதான வியாபாரிகள் ஒரு சிலரின் கைகளில் உள்ள ஏகபோக அதிகாரம் விவசாயிக்கு மட்டுமன்றி பாவனையாளர்களுக்கும் சுமக்க முடியாத ஒரு பாரமாக அமைந்துள்ளது என்பதாகும்.

இந்த விவசாய ஆதிபத்தியத்திலிருந்தும், வியாபார ஆதிபத்தியத்திலிருந்தும் விவசாயிகளையும், பாவனையாளர்களையும் பாதுகாத்துக் கொள்வதன் மூலம் நாட்டின் உணவுப் பிரச்சினைக்கு அதிகமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நாடு பூராவும் வாழும் சிறு அளவிலான விவசாயிகளால் இயற்கை விதை வகைகள், இயற்கை முறைகளின் மூலம் மண்ணை செழிப்பாக்கிக் கொள்ளல். விவசாய இரசாயனப் பொருள் பாவனையிலிருந்தும் தூரமாகி தமது பூமியில் உணவு வகைகளை சுலபமாக்கிக் கொள்ளல் உற்பட விவசாயிகள், பாவனையாளர்களிடையே நேரடியாக வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள உதவிசெய்தல் என்பவை அரசக் கொள்கையாகவும் திட்டமாகவும் இருத்தல் வேண்டும். தனியார் துறையினரின் ஆதிபத்தியத்திலிருந்தும் விடுபடல் இதற்கு அத்தியாவசியமாகின்றது. யுனி லீவர், நெஸ்லே, கோகா கோலா போன்ற நிறுவனங்களிடமுள்ள பிரச்சாரம் பலம் காரணமாக நாட்டு மக்களிடையே நுகர்வு முறையில் மாற்றங்களை ஏற்படுத்த சந்தர்ப்பம் வழங்கலும் தேசிய விவசாய உற்பத்திப் பொருள் மற்றும் உணவு விற்பனைத் துறையில் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

## 7. விவசாயிகளைப் பலப்படுத்தும், அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும்.று அளவிலான வி

நெல் கொள்வனவு சபை, விற்பனை அபிவிருத்தித் திணைக்களம், மீன்பிடிக் கூட்டுத்தாபனம், தேசிய பால் சபை உற்பட கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்ற அரச நிறுவனங்களின் மூலம் உற்பத்தியாளருக்கு உயர்ந்த விலையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பாவனையாளர்களுக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுத்தல் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உலக வங்கியினதும் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் ஆலோசனையின் பிரகாரம் கடந்த காலங்களில் அகற்றப்பட்டன. அரச தலையீட்டையும் விட தனியார் வியாபாரிகள் இக்காரியத்தை மிகச் சிறந்த முறையில் செய்வார்களென உலக வங்கி கூறினாலும் அது அவ்வாறு நடைபெறவில்லை யென்பதை உலக வங்கியின் உயர் அதிகாரிகள் சிலரும் கூட ஏற்றுக் கொள்கின்றனர். மேற்கூறப்பட்ட


உணவுப் பிரச்சினைக்கு தீர்வு தேடும் மக்கள் நடவடிக்கை



நிறுவனங்களை செயற்திறன் மிக்கதாகச் செயற்பட வைப்பதற்கான மிகப் பலமான பொதுமக்கள் தலையீட்டுக்கு சந்தர்ப்பமளிப்பதற்குப் பதிலாக அவற்றை மூடிவிடுவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் பொருள்களின் விலை உயர்ந்து செல்லவும் உற்பத்தியாளர்கள் சக்தி இழக்கவும் காரணமக அமைந்தது.

பிற்காலத்தில் நெல் கொள்வனவு மற்றும் அரிசி விலையைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் அரசு தலையிட வேண்டுமென்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் இன்றும் கூட நெல் கொள்வனவுக்காக அரசாங்கம் பணத்தை ஒதுக்குவது நெல் உற்பத்தியில் 5மூ க்கும் குறைவான நெல்லைக் கொள்வனவு செய்ய மட்டுமேயாகும். அதுவும் தாமதமாகிப் பணம் வழங்கப்படுவதோடு தேவையான காலத்தில் நெல் உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களுக்கு பணம் அனுப்பிவைக்கப்படுவதில்லை. நெல் கொள்வனவு சம்பந்தமான விடயத்தில் அரசாங்கம் உரிய முறையைக் கையாளாத காரணத்தால் இன்றும் கூட அது மேற்கொள்ப்படுவது தனியார் வியாபாரிகளுக்கு அதிக நன்மை கிடைக்கும் முறையிலாகவே உள்ளது.

கடந்த போகத்தின்போது சில தனியார் நிறுவனங்கள் கால் நடை உணவுக்காக அதிக அளவு நெல்லைக் கொள்வனவு செய்தனர். அவர்களுக்குத் தேவையான கால் நடை உணவை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அதிக பணம் மேவையாவதால் அவர்கள் மக்களின் தேவைக்காக உள்ள அரிசியை கால் நடை உணவுக்காக கொள்வனவு செய்கின்றனர். அரசாங்கம் தனியார் வியாபரிகள் கொள்வனவு செய்யும் விலையையும் விட அதிக விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்யத் தேவையான பணத்தை ஒதுக்க வேண்டியதோடு தேவையான அளவு நெல்லைக் கொள்வனவு செய்யவும் வேண்டும்.

இக்கொள்கை நெல் சம்பந்தமான விடயத்தில் மட்டுமல்லாது மீன், மரக்கறி, பழ வகைகள்போன்ற ஏனைய உணவுப் கொருள்களுக்காகவும் செயற்படுத்தப்பட வேண்டியதோடு இதனை உணவு உற்பத்தித் துறையை ஊக்குவிப்பதற்கான அத்தியாவசிய முதலிடாகவும் கொள்ள முடியும்.




# சிறு அளவிலான மீனவர்களை பலப்படுத்துவதும் பாதுகாத்துக் கொள்வதும்

எமது உணவின் மிகப் பெறுமதி வாய்ந்த ஒரு பகுதியைப் பெற்றுத் தருபவர்கள் சிறு அளவிலான மீனவர்களாக இருப்பதோடு அவர்களின் அளவு 5 இலட்சம் குடும்பங்களுக்கும் அதிகமாகும்.

ஒரு சில மீனவ வியாபாரிகளால் மேற்கொள்ளப் படும் தடைசெய்யப்பட்ட, அழிவு ரீதியான மீன்பிடி முறைகள் அத் தொழிற் துறைக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதனைத் தடை செய்யுமாறு மீனவர்கள் நெடுங்காலமாக வேண்டிக் கொண்டாலும் இக்கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படுவதாகத் தெரிவதற்கில்லை.

உல்லாசப் பிரயாணத் துறை வலயங்களை ஏற்படுத்தவும் இயந்திரமய மீன்பிடித்துறையைப் பரவலாக்கவும் கடந்த காலங்களில் அரசாங்கங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டன. விஷேடமாக சுனாமி விபத்துக்களான மக்களை மீளக் குடியேற்றும் போது அவர்களது தொழிற் சந்தர்ப்பங்களுக்கு தடங்கள் ஏற்படும்படியாக கடற் பகுதியிலிருந்தும் தூரமான பிரதேசங்களில் அவர்கள் குடியேற்றப்பட்டனர். இது கடற்கரையோரங்களை உல்லாசப் பிரயாணத்துறை வலயங்களுக்கான இடத்தைப் பெற்றுக் கொள்ளவும் வெளிநாட்டு மீன்பிடிக் கம்பனிகளை வரவழைத்துக் கொள்வதற்காகவும் மேற்கொண்ட நடவடிக்கைகளாகும். இது சிறு அளவிலான மீனவர்களின் ஜீவனோபாய மார்கங்கள் இல்லாமல் செல்லவும், அவர்களுக்கு கரையோர மற்றும் கடல் வளங்கள் சம்பந்தமாக உள்ள பாரம்பரிய உரிமையை இழக்கவும் காரணமாக அமைந்தது.



இக்கொள்கையில் மாற்றங்களைச் செய்து நாட்டின் மீனவ வளங்களை பாதுகாக்கும் படியாக, மீனவர்களின் ஜீவனோபாய மார்க்கங்கள் உறுதி செய்யும் படியாக, நாட்டு மக்களின் போஷாக்கு பாதுகாக்கப்படும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். உல்லாச பிரயாணத்துறையை கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் ஆறுகம்பை உள்ளாசப் பிரயானத் துறைக்கான பாலத்தின் நிர்மான நடவடிக்கைகளுக்காக 10 இலட்சம் அமெரிக்க டொலர்கள் செலவழிக்கப்பட்டன. இது சுனாமி மீளக்கட்டியெழுப்பும்

நடவடிக்கையொன்றெனவும் கூறப்பட்டது. அதனை சுனாமி நிவாரன உதவியாகவும் அறிமுகப்படுத்தல் அசாதாரனமாகும். இது சுனாமியால் விபத்துக்குள்ளாகி தமது வாழ்க்கையை கட்டியெழுப்பிக்கொள்ள முடியாமல் தவிக்கும் மக்களுக்குச் செய்யும் அகௌரவமாகும். இது போன்ற 15 உல்லாசப் பிரயாண வலயங்களை அமைக்கும் திட்டம் சுனாமி புனருத்தாரன செயற்திட்டத்தில் அடங்கி இருந்தது. இப் பணம் மீனவ மக்களின் நன்மைக்காகவும், மீன்பிடித்துறையின் நிலையான அபிவிருத்திக்காகவும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

மீனவர்களுக்கு தமது தொழிலுக்காக கடல் மற்றும் நீர் தேக்கங்களுக்குப் பிரவேசிப்பதற்கான உரிமையும் சந்தர்ப்பமும் உறுதி செய்யப்படல் வேண்டும். அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகவும் இன்னும் பல்வேறு காரணங்களைக் கொண்டும் தடைசெய்யப்பட்டுள்ள காரணத்தால் இந்த உரிமைகளை இழந்துள்ள மீனவ மக்களுக்கு தேவையான பாதுகாப்போடு தொழிலுக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அத்தோடு அந்த மக்களுக்கு தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்து கொள்வதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

8. *பெரும் தோட்டத்துறை மக்களுக்கு உணவு, போஷாக்கு மற்றும் கௌரவமான பிரஜைகளாக வாழ்வதற்கு காணி உரிமையைப் பெற்றுக் கொடுத்தல். முழு மலையப் பிரதேசத்தையும் ஒரு பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தல்.*

பேரும் தோட்டத்துறை மக்கள் கடந்த 175 வருட காலங்களாக இலங்கைக்கு பாரிய செல்வத்தை உழைத்துத் தருவதற்காக தமது உழைப்பை அர்ப்பனித்துள்ளனர். அம்மகளுக்கு நாட்டின் கௌரவமான விரஜைகளாக வாழ்வதற்குத் தேவையான உணவு, கல்வி, சுகாதார வசதிகள் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பிரஜைகளுக்கு போன்று பூமியின் உரிமையைப் பெற்றுக் கொடுத்தல் மேலும் தாமதப் படுத்தக் கூடாத ஒரு விடயமாகும். தோட்டச் சொந்தக் காரர்கள் தேயிலைத் தொழிற் துறையின் மூலம் அதிக இலாபத்தை பெற்றுக் கொண்டாலும் தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கு போதுமான அளவு சம்பளத்தை வழங்க அவர்கள் உடன்படுவதில்லை. நாட்டின் ஏனைய விவசாயத்துறைத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 500ரூ அல்லது அதற்கும் மேலான சம்பளத்தைப் பெறும் போது தோட்டத் தொழிலாளர்கள், தொழிலாளர் பெண்கள் பெறுவது 200:- ரூபா அளவு சொற்ப சம்பளத்தையேயாகும். இன்றைய உணவுப் பொருள்களின் விலையை கவனத்தில் கொள்ளும்போது எவ்வகையிலும் இது போதுமான ஒரு சம்பளமல்ல.

தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஏனைய எல்லாத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் வாழ்க்கை செலவு உயர்வுக்கு ஏற்றபடி சம்பள உயர்வு நிர்ணயிக்கப்பட வேண்டும். உணவுத் தட்டுப்பாடு உற்பட போஷாக்கு குறைவு அதிக அளவில் நிலவும் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு தமது போஷாக்கு நிலைமையை உயர்த்திக் கொள்வதற்காக மரக்கறி, பழ வகைகள் போன்றவற்றைப் பயிரிடவும், கால் நடை வளர்ப்புக்காகவும் ஓரளவு காணியைப் பெற்றுக் கொடுப்பதும் கட்டாயமாகும்.

தற்பொழுது மலையகப் பிரதேசங்களில் உள்ள காணிகளில் 1:4 (25%) மானவை பயிரிடப்படாத நிலங்களாகும். இவற்றை பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். "பயிர் செய்வோம். நாட்டைக் கட்டியெழுப்புவோம்" திட்டத்தின் கீழ் பயிர் செய்யாத நிலங்களைக் கைப்பற்றி பயிர் செய்ய விரும்பும் மக்களுக்கு வழங்கப்படுமென கூறப்படுகிறது. இதனை மலையகப் பிரதேசத்திற்காகச் செயற்படுத்தல் வேண்டும். மலையகத்தில் இளைஞர்களுல் 49.9 % மும் யுவதிகளுல் 57.1% மும் தொழிளற்றவர்களாக வாழ்கின்றனர்.

## மலையத்தை ஒரு பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தல்.



முழு நாட்டின் சுற்றாடலைப் பாதுகாக்கவும், நீரூற்றுக்களை அபிவிருத்திசெய்யவும், வெள்ளப் பெருக்கு, வரட்சி மற்றும் மண் சரிவு போன்றவற்றை தடுத்து நிறுத்தவும் மலையப் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தல் மிக அத்தியாவசியமான ஒரு நடவடிக்கையாகும். அதிக பள்ளத்தாக்குடன் கூடிய உயர் நிலங்கள் பயிர்ச் செய்கை நிலங்களாக மாற்றியமைத்தல், ஏனைய எல்லா நிலங்களும் அப்பகுதி மண்ணைப் பாதுகாக்கும் விதத்திலான கலப்புப் பயிர்ச் செய்கையுடன் கூடிய கேடுதலான இரசாயன இடு பொருள்கள் பயன்படுத்தாத பயிர்ச் செய்கையை மேற்கொள்வதன் மூலம் மலையக மக்களுக்கு தேவையான போஷாக்கையும் நல்லதொரு வாழ்க்கை நிலையையும் பெற்றுக் கொடுக்க முடிவதோடு இது முழு நாட்டினதும் சுற்றாடல் பாதுகாப்பிற்கு அத்தியாவசியமான ஒரு நடவடிக்கையுமாகும்.

இவ்வாறானதொரு பயிர்ச் செய்கைக்கான வழிகாட்டலைப் பெற்றுக் கொடுத்தல், நிபந்தனைகளின் அடிப்படையில் அந்த மக்களுக்கு சிறு சிறு காணிகளைப் பெற்றுக் கொடுத்தல் நிலையான அபிவிருத்திக்கும், உணவைச் சுலபமாக்கவும், சுகாதாரத்திற்கு ஏற்ற உணவை, நீரைப் பெற்றுக் கொள்ளவும் செழிப்பான பூமியை உருவாக்கிக் கொள்ளவும் ஏற்ற ஒரு நடவடிக்கையாக அமையும். அந்த மக்களுக்கு நாமும் இலங்கைப் பிரஜைகள் என்ற உணர்வு ஏற்பட இது மிக அத்தியாவசியமான ஒரு விடயமாகும்.

## இயற்கையின் மீளுற்பத்தித் திறனை கட்டியெழுப்புவதற்காக மலையக பயிர்ச் செய்கைத் துறையைக் கட்டியெழுப்புவது கட்டாயமாகும்.




விவசாயமும் வாழ்க்கையும் பாதுகாக்கப்படுவது இயற்கையின் மீளுற்பத்தித் திறன் பாதுகாக்கப்படும் வரை மாத்திரம்தான். அதிக இலாபத்தைச் சம்பாதிப்பதற்காக முழு மலையகத்திலுமுள்ள இயற்கையான காடுகளை அழித்து ஒற்றை வகைப் பயிர்ச்செய்கையான தேயிலைப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தல் இயற்கையில் மீளுற்பத்தித் திறனை அழிந்தொழிக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அமைந்தது. அந்த மீளுற்பத்தித்திறனை மீளக்கட்டியெழுப்புதல் இலங்கையின் விவசாயக் கொள்கையாக இருத்தல் வேண்டும். அதற்கான முதல்படி மலையகப் பயிர்ச் செய்கையை மேற்கூறிய மீளுற்பத்தித் திறன் மிக்க பயிர்ச் செய்கையாக மாற்றியமைப்பதேயாகும்.

இன்று மிக வேகமாகப் பரவிவரும் சிறு நீரக நோய் உற்பட இன்றும் சில நோய்களுக்கு முக்கிய காரணமாக உள்ளது நீராகும். இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு நீரூற்றுக்களின் மூலாரம்ப இடமான மலையகம் பாதுகாகப்பப் படல் வேண்டும்.

இந்த பரிவர்த்தனையின் மூலம் கிடைக்கும் பொருளாதார இலாபங்களை அளவிடுவதாக இருந்தால் அதன் காரணமாக ஏற்படும் மண் பாதுகாப்பு, நீர் பாதுகாப்பு, உணவு மற்றும் போஷாக்கு நிலை உயர்ந்து செல்லல்,

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பயிர்ச் செய்கைத் துறைக்கு ஏற்படும் சாதகமான தன்மை, சுகாதார வளர்ச்சி மற்றும் வாயு கோல வெப்ப நிலை குறைந்து செல்லல், காடுகள் அதிகரித்தல், போன்றவற்றை மதிப்பிட முடியும். இதனை இன்று தோட்டத்துறை பயிர்ச் செய்கையின் மூலம் ஒரு சில கம்பனிகள் சம்பாதிக்கும் இலாபத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் வேண்டும்.


## 9. பெண்களின் பொறுப்பும், பங்களிப்பும்.



நாட்டின் பயிர்ச் செய்கைத் துறைக்கான பெண்களின் பங்களிப்பு என்றும் மிக உயர்ந்த அளவில் இருந்து வந்தது. முக்கியமாக விவசாயத்தினுல் பாதுகாப்பு மற்றும் மீளுற்பத்தித் திரனை கட்டியெழுப்பும் விடயத்தின்போது சிறு அளவிலான வீட்டுத் தோட்டங்களிலும் பயிர்ச் செய்கை நிலங்களிலும் பெண்களால் செய்ய முடிந்த காரியங்கள் மிக அதிகமாகும். விதைப் பாதுகாப்பு, உயிரியல் பல்வகைமை, உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவுத் தன்னாதிக்கம் என்பவற்றுக்காக பெண்களால் அதிக பங்களிப்பை நல்க முடியுமென்பது உலகம் பூராவும் அனுபவங்களின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 30 வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட சந்தைப் பொருளாதார கொள்கையினுள் பெண்கள் கனிக்கப்பட்டது முதலீட்டாளர்களையும் வியாபாரிகளையும் ஊக்குவிப்பதற்காக பயன்படுத்த முடிந்த அடிமைத்துவ இலாப உழைப்பாளர்களென மட்டுமே. கிராமப்புற பொருளாதாரம் சரிந்து வீழ்ந்ததன் பின்னர் அவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாகவும் ஏற்றுமதி ஆடைத் தொழிற் துறையில் இலாப உழைப்பாளர்களாகவும் இடம் பெயரத் தொடங்கினர். பெண்களின் பொருப்புக்கள், பங்களிப்புக்கள் இவ்வாறு பலம் குறைதல், அவர்களது வாழ்க்கையில் இருந்து வந்த சுயாதீனமான நிலை சரிந்து விழல் இதற்குக் காரணமாகியது. கிராமிய உணவு உற்பதி சரிந்து விழல் உற்பட உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து செல்லல் பெண்களிடையே இரத்தப் பற்றாக் குறையும் போஷாக்கின்மையும் உயர்ந்து செல்லக் காரணமாக அமைந்தது.

பெண்கள் வெறும் இலாப உழைப்பாளர்களாகக் கனிப்பதற்குப் பதிலாக அவர்கள் மீளுற்பத்தித்திரன் கொண்ட பாதுகாப்புப் பயிர்ச் செய்கையின் திட்டமிடளாளர்களாகவும் கொண்டு நடாத்துபவர்களாகவும் மேற்கொள்ள முடிந்த பங்களிப்பைப் பற்றியும் நாங்கள் புறிந்து கொள்ள வேண்டும். சமுதாயத்தினுல் கௌரவமான சேவைகளை நிறைவேற்ற இது போன்ற பரிவர்த்தனைகளில் மூலம் பெண்களுக்கு அதிக சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

## 10. இளைஞர்களுக்கு கௌரவமான தொழிந்வாய்ப்பையும் திருப்தியான வாழ்க்கையையும் பெற்றுக் கொடுப்பதற்கு மீளுற்பத்திப் பயிர்ச் செய்கைக்குள்ள திரன்.



இளைஞர்களின் வீரச் செயல்களையும் அவர்களது சமுதாயப் பங்களிப்பையும் பெற்றுக் கொள்வதற்கான வழி முறைகளை தயார் செய்வதில் எமது சமுதாயம் இன்னும் வெற்றி கொள்ளவில்லை. 40 இலட்சங்களான பாடசாலை மாணவர்களினதும் அவர்களது பெற்றோர்களினதும் ஒரே அபிலாஷையாக இருப்பது உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வதும், அதன் மூலம் கௌரவமான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதுமாகும்.

இப்பிரச்சினையை தீர்க்க முடியாத காரணத்தால் நாட்டில் இரண்டு கிளர்ச்சிகளும் நீண்டதொரு யுத்தமும் ஏற்பட்டதை நாமறிவோம். வருடத்திற்கு 250,0000 ம் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்காக முன் நிற்கின்றனர். கடந்த வருடம் 119.000 ம் மாணவர்கள் பல்கலைக்கழகப் பிரவேசிப்பிற்குத் தேவையான புள்ளியைப் பெற்றாலும் பல்கலைக்கழகங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 17.000 ம் பேர் மட்டுமேயாகும். இவ்வாறு வருடமொன்றுக்கு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட படித்த இளைஞர்கள் புறக்னிக்கப்படுகின்றனர். அதையும் விட அதிகமான இளைஞர்கள் அதற்கு முன்னர் புறக்கனிக்கப்படுகின்றனர்.

நாட்டுக்கு ஏற்ற அபிவிருத்தி மார்க்கமொன்றைக் கட்டியெழுப்பும் போது எம்மிடமுள்ள இலாபகரமான இயற்கை வளங்களை சரியான முறையில், பாதுகாப்புடன் பயன்படுத்திக் கொள்ளல் உணவுப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக மட்டுமன்றி ஏனைய எல்லா விடயங்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.


நாட்டுக்குத் தேவையாக இருப்பது பூமி, நீர், மரம் செடி கொடிகள், பயிர் வகைகள், சுற்றாடல் போன்றவற்றை மீளுற்பத்தி செய்யும் ஒரு பயிர்ச் செய்கையாகும். அவ்வாறான ஒரு அபிவிருத்தியாகும். அதற்காக இது வரை மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கையில் பாரிய மாற்றம் தேவையாகின்றது. அது இன்று உலகம் பூராவும் பயிர்ச் செய்கைத் துறையில் மேற்கொள்ள வேண்டிய ஒரு பரிவர்த்தனையும் ஆகும்.



நாட்டின் இளைஞர்களை இப்பரிவர்த்தனைக்கு வழிகாட்டும் விஞ்ஞான அறிவுடனும் திறமைகளுடனும் கூடிய ஒரு சக்தியாக மாற்றியமைப்பதற்காக உள்ள திரண் அதிகமாகும். இப்பரிவர்த்தனைக்கான வழி காட்டிகளாக மாறல் இளைஞர்களுக்கு திருப்திகரமான ஒரு தொழிலாகவும் அமைந்து விடும். அதில் உள்ள பாரிய சமுதாயப் பனி அவர்களை ஆகர்சிக்கும். அதன் மூலம் நாடு பூராவுமுள்ள நிலங்களின் உற்பத்தித் திரனைத் அதிக அளவில் உயர்த்த முடிவதோடு, அதன் மூலம் அந்த இளைஞர்களுக்கு சந்தோஷப்பட முடிந்த அளவு பிரதிபலனைப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பமும் கிடைக்கும். இவ்வாறான சுற்றாடல் விவசாயத்தை நோக்கிச் செல்லும் இளைஞர்களுக்கு அந்த சுற்றாடல் பயிர்ச் செய்கை முறை பற்றிய அறிவை அனுபவத்தை முன்னேற்றிக் கொள்ளத் தேவையான உயர் கல்விக்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல் கஷ்டமான ஒரு காரியமாக அமைவதில்லை. இளைஞர்கள் இன்று பயிர்ச்செய்கைத் துறையிலிருந்து தூரமாவது அதன் மூலம் உழைப்புக்குத் தகுந்த பலன் கிடைக்காத காரணத்தாலும், அதற்குள்ள சமுதாய ஏற்பு குறைவின் காரணத்தினாலுமாகும். மேற்கூறிய நவீன விஞ்ஞான ரீதியான சுற்றாடல் விசாயம் மற்றும் அதற்கு வழிகாட்டும் செயற்பாடுகள் இதற்கு முற்றிலும் மாற்றமான கௌரவமான ஒரு தொழிலாக அமைந்து விடும்.

இன்று உலகம் பூராவும் அழிந்து செல்லும் பூமியை, சுற்றாடலை உணவின் போஷாக்கினை சுகப்படுத்தும் காரியம் தரமான ஒரு டாக்டரின் தொழிற் துறைக்கு சமமானதாகவே இருக்கும். அனாதரவானவர்களாக நகர்ப்புறங்களை நோக்கி இடம் பெயரவும் வெளிநாட்டுத் தொழிலுக்காக காத்திருக்கவும் வேண்டி வருவதில்லை. இன்று நாட்டிலுள்ள படித்த இளைஞர்களுக்கு இந்த அறிவைப் பெற்றுக் கொடுத்தல், அதற்குத் தேவையான கல்வியை, பயிற்சியை கல்வி நிறுவனங்களின் மூலம் பெற்றுக் கொடுத்தல், அதற்கான வசதிகளை ஏற்படுத்தல் செய்ய வேண்டிய காரியங்களாகும்.

## 11. தொழிலாளர் வகுப்பினருக்கும்,மத்தியதர வகுப்பினருக்கும் நிவாரன உதவிகளை வழங்கள் மற்றும் அவர்களது தேவைகளைப் பூ ர்த்தி செய்தல்.




நாட்டின் வறிய உழைக்கும் மக்களுக்கும் மத்தியதர வகுப்பினருக்கும் தாங்க முடிந்த அளவுக்கு வாழ்க்கைச் செலவையும், உணவு, சுகாதாரம், கல்வி போன்றவற்றின் செலவுகளையும் கொண்டு நடாத்தல் 1977 ம் அண்டு வரை ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களும் கடைபிடிக்கப்பட்டு வந்த கொள்கையாக இருந்து வந்தது.

இருந்தாலும் 1977 ம் ஆண்டின் பின்னர் தொடர்ந்து 30 ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்டது இதற்கு முற்றிலும் மாற்றமான ஒரு முறையே. வெளி நாட்டு முதலீட்டார்களை வரவழைத்துக் கொள்ளவும், தனியார் துறை வியாபாரிகளின் முன்னேற்றத்திற்காகவும் எல்லா அரசாங்கங்களும் பாரிய அளவு பணத்தைச் செலவழித்தன. அதனால் நாட்டின் வறுமை நிலை குறையவில்லை. இன்று அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட கடனை திருப்பிச் செலுத்த வேண்டி வந்திருப்பது வறிய மக்களுக்கும், மத்தியதர வகுப்பினருக்குமேயாகும். இந்த நிலையில் மேற்கூறிய தோல்வியான திட்டங்களின் அடிப்படையில் முன்னோக்கிச் செல்ல மேலும் முயற்சி செய்தல் காரணமாக வறிய மக்கள் மீது சுமக்கமுடியாத அளவுக்கு வாழ்க்கைச் செலவு சுமத்தப்பட்டுமுள்ளது. இது எந்த வகையிலும் நாட்டுக்கு தாங்க முடிந்த ஒரு சுமையல்ல. பணக்காரர்களுக்கு நிவாரன உதவியைப் பெற்றுக் கொடுக்க மேலும் மேலும் அதிக வட்டியில் கடன் வாங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாக இருப்பதோடு பொது மக்களால் தாங்க முடிந்த அளவுக்கு வாழ்க்கைச் செலவு குறைக்கப்படவும் வேண்டும். அரசாங்கம் இதற்காகச் செய்யும் செலவைக் கொள்ள வேண்டியது நிவாரன உதவியாகவன்றி சமுதாய ஸ்தாவர நிலைக்காகவும், மக்களின் நடை முறை வாழ்க்கைக்கும் செய்யும் பயனுள்ள முதலீடாகவுமாகும்.

இவ்வாறு திருப்தியுற்ற ஆரோக்கியமான மக்களின் பங்களிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு அதிக அளவில் துணையாக அமையும். நாங்கள் இதுவரை விபரித்தவாறு நாட்டின் எல்லா மக்களாலும் உணவு உற்பதி, போஷாக்கு, மற்றும் உற்பத்தித் திரனை முன்னேற்றுவதற்காக செய்யும் பங்களிப்பின் மூலம் தற்பொழுது நாங்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகளில் இருந்தும் அவசரமாகக் கரைசேரச் சந்தர்ப்பம் கிடைக்குமென நாங்கள் நம்புகிறோம்.

## 12. வறிய மக்களுக்கு ஏற்க்க முடிந்த விலையில் சுகாதாரத்திற்கேற்ற உணவை போதுமான அளவு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தலையிட வேண்டும்.



மேற்கூறிய திட்டத்தின் கீழ் குறுகிய காலத்தினுல் சுகாதாரத்திற்கு ஏற்ற உணவைச் சுலபப்படுத்தவும், இன்று வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவும் விலை கூடிய இரசாயனப் பசளை, இரசாயன கிருமி நாஷினி மற்றும் சக்தி வளம் பயன்படுத்தப்படாத பயிர்ச் செய்கை முறையைக் கட்டியெழுப்ப முடியுமென நாங்கள் நம்புகிறோம்.

அதுவரைக்கும் நாட்டு மக்களால் சுமக்க முடிந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அரசாங்கம் உடனடியாக மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

நாட்டின் வறிய மக்களால் அவர்களுக்குத் தேவையான அரிசியை 60 ரூபாவுக்கு விலைக்கு வாங்குவது முடியாத காரியமாக உள்ளது. உணவுப் பொருள் விலை உயர்வின் காரணமாக ஏற்படும் பட்டினி, போஷாக்கின்மை பயங்கரமான பிரச்சினைகளை ஏற்படுத்தக் காரணமாக அமைவது நிச்சயமாகும்.

ஆதலால் அரிசிப் பங்கீட்டு முறையை ஏற்படுத்தி, அது வழங்கப்பட வேண்டிய தகுதியான மக்களைக் கண்டறிந்து (கிராமிய, நகர்ப்புற வறியவர்கள், தோட்டத் தொழிலாளர்கள், போஷாக்கின்மைக்கு உள்ளாகும் பிரதேச மக்கள், தாய் மார், சிறுவர்கள்) அவர்களால் சுமக்க முடிந்த விலையில் அரிசியும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களும் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். முறையான ஒரு திட்டத்தின் அடிப்படையில் விலை குறைந்த, சுகாதாரத்திற்கு ஏற்ற போதுமான அளவு உணவைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு திட்டம் கட்டியெழுப்பப் பட வேண்டும். இதற்காக கூட்டுறவு போன்ற நேரடி விற்பனை முறைகளைத் தயார் செய்யவும் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நிவாரன உதவிகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய தேவையும் ஏற்படாமல் செல்லும்.

# பரவலான பொது மக்கள் நடவடிக்கையை முன்னெடுத்தல்.

மேல் குறிப்பிடப்பட்ட செலவு சம்பந்தமான யோஷனைகளைச் செயற்படுத்தல் ஆரம்பிக்கப்பட வேண்டியது அது சம்பந்தமான தெளிவுடன் கூடிய அமைப்புக்களினூடாக இருக்க வேண்டுமென நாங்கள் நம்புகிறோம்.

1. இதற்குத் தேவையான யோசனைகளுடன் கூடிய பொதுமக்கள் பெட்டிசம் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும், பிரதேசங்களிலும் மக்கள் அமைப்புக் கூட்டுக்களால் கலந்துரையாடலுக்கு உட்படுத்தல்.

2. இந்த யோசனைகளை அந்தந்த பகுதிகளுக்கு ஏற்றவாறு தயார் செய்தல், திட்டமிடல்.

3. இந்த யோசனைகளை அரச அவதானத்திற்கு உட்படுத்துவதற்காக இயன்ற அளவில் கை யொப்பங்களைச் சேகரித்தல்.

4. தற்பொழுது நாட்டின் பல்வெறு பிரதேசங்களில் வெற்றிகரமாகச் செயற்படும் சுற்றாடல் விவசாயிகளின் அனுபவங்களை ஒன்று திரட்டி நாட்டு மக்களையும், அமைப்புக்களையும் அரச உத்தியோகஸ்தர்களையும், புத்தி ஜீவிகளையும் அறிவுறுத்தல்.


5. வறுமை நிலையை ஒழித்துக்கட்டும் நிகழ்ச்சிகளான சமுர்த்தி திட்டம், பயிர் செய்வோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம். கம நெகும, கெமி திரிய, நிகழ்சிகளினூடே சுற்றாடல் விவசாயப் பகுதிகளைக் கட்டியெழுப்பல்.

6. தேசிய விதைவகைகளை ஒன்று திரட்டல். பாதுகாத்தல், பரவலாக்கள் மற்றும் தேசிய பாரம்பரிய விவசாய அறிவைப் பயன்படுத்தல். வனிக ரீதியான மலட்டு விதை வகைகளை நிராகரித்தல் உற்பட கேடுதலான விவசாய இடு பொருள்களை


7. தவரான அரசக் கொள்கைக்கு எதிராகத் தாக்கங்களைச் செய்தல்.

# உணவுப் பிரச்சினை மற்றும் தீர்வுகள் சம்பந்தமான பொது மக்கள் நடவடிக்கை

## சந்தேசய



01. உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடிவது சிறு அளவிலான விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை முறையின் மூலமேயாகும். அது சுற்றாடலுக்குச் சாதகமானதாக இருக்கவும் வேண்டும். இயற்கை மீளுற்பத்தித் திரனை மீண்டும் கட்டியெழுப்புவதாக இருக்கவும் வேண்டும். அதற்காக பயிர்ச் செய்கை முறை பற்றிய பாரம்பரிய அறிவை பாதுகாத்து பயன்படுத்தவும் வேண்டும். பசளை நிவாரன உதவி மற்றும் இரசாயன இடு பொருள்களுக்காக வழங்கப்படும் பணம், இதுபோன்ற பயிர்ச் செய்கைத் துறையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நேரடியாக பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும்.



02. விவசாயத் திணைக்களம், அமைச்சுக்கள், விவசாயக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் அனைத்தும் இதுபோன்ற பயிர்ச் செய்கை முறையொன்றுக்காக வடிவமைக்கப்படல் வேண்டும். கிராமிய வறுமை நிதுயை ஒழிக்கும் நிகழ்ச்சிகளான பயிர் செய்வோம் நாட்டைக் கட்டியெழப்புவோம் கெமி திரிய கம நெகும சமூர்தி போன்ற நிகழ்சிகள் அதுபொன்ற பயிர்ச் செய்கை முறையை அடிப்படையாக்க கொண்ட நிகழ்சிகளாக மாற்றியமைத்தல் வேண்டும்.

03. சிறு அளவியான விவசாயிகளின் வாழ்க்கையை அழித்தொழிக்கும் மீன்பிடி முறைகள் இடைநிறுத்தபட வேண்டிய தோடு உல்லாசப் பிரயாணத்துறை வளயல்கள் மற்றும் பாரிய அளவிலான மீன்பிடித்துறை பரவலாக்கக் கூடாது. இதுபோன்ற நடவடிக்கைகலுக்காக பயன்படுத்தும் வறங்கள், நிர்வறங்கள், என்பற்றைப் பாதுகாக்கும், நன்னிர் மற்றும் சிறு அளவிலா மீனவர்களின் நிழயான அபிவிருத்திக்காகவும் அவை பயன்படுத்தப்பட வேய்டும். அந்த மீனல மக்கலுக்கு கடல் மற்றும் தமது உற்பத்திப் பொருற்கள விற்மன செய்து கொள்லும் உரிமையும நிய நிறுத்தப்பட வேண்டும்.


04. மீளுற்பத்தித் திறன் கொண்ட இயற்கை விதைவகைகளைப் பாதுகாத்தல் மற்றும் பரவலாக்கள் அரசின் கொள்கையாக இருத்தல் வேண்டும். போகத்துக்கு போகம் பயன்படுத்த முடியாத விதைப் பரவலாக்கள் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.



05. ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட வணிக ரீதியான பயிர்ச் செய்கையையும் விட நாட்டு மக்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதற்காக பூமியை மற்றும் வளங்களை ஒதுக்கும் நடவடிக்கைக்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும்.


06. விவசாயம் மற்றும் உணவுப் பொருள் விற்பனை சம்பந்தமாக கம்பனிகளின் மற்றும் தனியார் வியாபாரிகளின் கைகளில் உள்ள ஆதிபத்தியம் இல்லாதொழிக்கப்படல் வேண்டும்.


07. உணவு உற்பத்தி நடவடிக்கையில் முக்கிய பங்கு வகிக்கும் சிறு அளவிலான விவசாயிகள் மற்றும் மீனவர்களைப் பலப்படுத்தவும், அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்திலும் அரசாங்கம் தலையிட வேண்டும்.



08. சிறு அளவிலான விவசாயிகளின் வாழ்க்கையை அழித்தொழிக்கும்படியாக உல்லாசப் பிரயாணத்துறை வலயங்கள் மற்றும் பாரிய அளவிலான மீன்பிடித் துறையை பரவலாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படக் கூடாது. இவற்றுக்காகப் பயன்படுத்தும் வளங்கள், நீர் வளங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கவும், நண்ணீர் மற்றும் கரையோர சிறு அளவிலான மீனவர்களின் நிலையான அபிவிருத்திக்காகவும் பயன்படுத்த வேண்டும். அந்த மீனவ மக்களுக்கு கடல் மற்றும் நீர் தேக்கங்களுக்கு பிரவேசிப்பதற்கான மற்றும் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்து கொள்ளும் உரிமையும் நிலை நிறுத்தப்படல் வேண்டும்.

09. மிகவும் பயங்கரமான முறையில் உணவு மற்றும் போஷாக்குப் பிரச்சினைக்கு முகம் கொடுப்பவர்கள் யுத்த பிரதேசங்களில் வாழும் மக்களும் இடம் பெயர்ந்து வாழும் மக்களுமேயாவர். அப்பிரதேசங்களில் உள்ள அதிக அளவிலான காணிகள் மற்றும் கடற் பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப் படல் அந்த மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பெரும் அச்சுருத்தலாக அமைந்துள்ளது. யுத்த பிரதேசங்களில் சந்தை வசதிகளும் மிகக் குறைவாக இருப்பதனால் அப்பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்தல், மற்றும் உணவைப் பெற்றுக் கொள்ளல் பெரும் பிரச்சினையாக உள்ளது. பேச்சுவார்த்தையின் மூலம் இதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.






10. பெருந்தோட்டப் பிரதேச மக்களுக்கு தமது உணவு மற்றும் போஷாக்கு சம்பந்தமான தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவும், அவர்களுக்கு கௌரவமான பிரஜைகளாக வாழவும் தேவையான காணி உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். தோட்டத் தொழிலாலர்கள் உற்பட ஏனைய எல்லாத் தொழிலாலர்களினதும் சம்பளம் நிலவும் வாழ்க்கைச் செலவு புள்ளிக்கு சமாந்தரமாக உயர்த்தப் படல் வேண்டும். முழு மலையகப் பிரதேசமும் நீர் வளப் பிரதேசமாக பாதுகாக்கப்படல் வேண்டும்.

11. பாரிய அளவிலான கடன் அமைத்துக் காரணமான வெளிநாட்டு முதலிட்டாளர்கள் மற்றும் தனியார் துறையை ஊக்குவிம்மதற்காக அதி வேக நெடுஞ்சழெகள் சர்வதேவ விமான நிழயங்மள், துறைமுகம்கள் போன்ற நிர்மான நடவடிக்கைகழுக்காக பெற்றக் கொள்ளப் படும் கடன் வாங்கள் இடைநிறுத்தபட வேண்டும். அபிவிருத்தி மக்களின் சத்தயை அடிப்படையாகக் கொண்டதாகவும் மக்கலுக்கு ஆரோக்கிய மானதாகவும் இடுத்தல் வேண்டும்.

12. தொழிலின்மை மற்றும் நகர்ப்புற இடம் பெயர்வுக்கு உள்ளாகியுள்ள அதிக அளவிலான இளைஞர்களுக்கு கௌரவமான தொழிற் சந்தர்ப்பங்களும் திருப்திகரமான ஒரு வாழ்க்கையையும் பெற்றுக் கொடுப்பதற்காக மீளுற்பத்தித் திரனை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கைக்கு அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன. அதற்கான அறிவும், வசதிகளும் பெற்றுக் கொடுக்கப் படல் வேண்டும்.



13. பாரதூரமான முறையில் கடன்காரராக வழி வகுத்துள்ள, முதலீட்டாளர்களையும், தனியார் துறையையும் ஊக்குவிப்பதற்காக அதி வேக நெடுஞ்சாலைகள், துறை முகங்கள், சர்வதேச விமான நிலையங்கள் போன்ற நிர்மான நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படும் பாரிய அளவிலான கடன் வாங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். அபிவிருத்தி மக்களின் சக்தியை அடிப்படையாகக் கொண்டதாகவும் மக்களுக்கு சாதகமானதாகவும் இருத்தல் வேண்டும்.



14. தொழிளாலர் வகுப்பினருக்கும், நகர்ப்புற மத்திய தர வகுப்பினருக்கும் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம் கொடுத்தல் மிகவும் கஷ்டமானதாக உள்ளதோடு அவர்களது தேவைகளை நிறைவேற்ற அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும்.

15. வறிய மக்களால் தாங்க முடிந்த விலையில் சுகாதாரத்திற்கு ஏற்ற உணவை போதுமான அளவு பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும்.

இறுதியாக உணவுப் பிரச்சினக்கு தீர்வாக அமைவது எமது நாட்டின் பெரும்பாக்மை மக்களான வறிய மக்களின் வாழ்க்கை யுத்தத்தால் அழிந்து செய்வதைத் தடுத்து நிறுத்தி, விதை, நிர் மற்றும் எனய நடவடிக்கைகள், உபகரணங்கள் மற்றும் அறிவின் நோடி உரிமை அவர்கலுக்கு கிடைக்கும்படியாக பரந்த பொதுமக்கள நடவடிக்கையை கட்டியெழுப்பல் மற்றும் அதற்குத் தேவையான கொள்கையை மற்றும் உதவியானப் பெற்றுக் கொடுக்குப்படியாக அரச நிறுவனல்கள் மறுபிரமைக்க அரசுக்கு தாக்கங்களைச் செய்ய முள் வருவதன் முலமேயாடும்.

மேற்கூறப்பட்ட காரணங்களை கவனத்திற் கொண்டு உடனடியாக எமது பொருளாதார கொள்கையை தயார்செய்வதன் மூலம் உணவுப் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுமாறு வலியுறுத்துகிறோம்.



உணவுப் பிரச்சினைக்கு தீர்வு தேடும் மக்கள் நடவடிக்கை

1151/58ஏ, 4 வது ஒழுங்கை, கோட்டே வீதி, ராஜகிரி
தொலை பேசி – தொலைநகல் – 0114407663/ 0112865534